RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 142 மே.30 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# ஒத்திவைக்கப்படும் தீர்ப்பை 3 மாதங்களுக்குள் வெளியிட உயர் நீதிமன்றங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி: மே.30-

நாடு முழுவதும் உள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களும் தாங்கள் ஒத்திவைக்கும் தீர்ப்புகளை மூன்று மாதங்களுக்குள் வெளியிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜாய்மால்ய பக்ச்சி ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவில், 'தீர்ப்புகளை வெளியிடுவதில் ஏற்படும் தாமதம் வழக்காடுபவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்துகிறது. எனவே, அனைத்து உயர் நீதிமன்றங்களும் தீர்ப்புகளை ஒத்திவைத்த மூன்று மாதங்களுக்குள் அவற்றை வெளியிட வேண்டும்.

தனிநபர் சுதந்திரம் தொடர்பான வழக்குகளில் விரைவான தீர்ப்புகள் தேவை. ஜாமின் மனுக்கள் மீதான உத்தரவுகள் அதே நாளில் வெளியிடப்பட வேண்டும். ஒருவேளை ஒத்திவைக்கப்பட்டால் அடுத்த நாளே வெளியிடப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும். ஜாமீன் அல்லது தண்டனை தொடர்பான உத்தரவுகள் வெளியிட்ட உடனேயே சிறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.



விசாரணைக் கைதி அல்லது தண்டனை பெற்றவர் அதே நாளில் அல்லது அதிகபட்சமாக அடுத்த நாளுக்குள் விடுவிக்கப்பட வேண்டும். தீர்ப்பின் முக்கிய பகுதி மட்டுமே வெளியிடப்பட்டால் அதற்கான முழுமையான காரணங்களுடன் கூடிய தீர்ப்பு 15 நாட்களுக்குள் இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

தீர்ப்பை ஒத்திவைத்த நான்கு மாதங்களுக்குள் அது வெளியிடப்படாவிட்டால் வழக்காடுபவர்கள் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை அணுகி, அந்த வழக்கை வேறொரு அமர்வுக்கு மாற்றக் கோரலாம்.

காரணங்களுடன் கூடிய முழுமையான தீர்ப்பு நீதிமன்றத்தில் வெளியிடப்படும்போது அந்த தீர்ப்பு 24 மணி நேரத்துக்குளு இணையதளத்தில் பதிவேற்றப்பட வேண்டும்.

இந்த வழிகாட்டுதல்கள் எந்தவொரு குறிப்பிட்ட நீதிபதி மீதோ, உயர் நீதிமன்றத் தீர்ப்பு மீதோ அவதூறு சுமத்தும் நோக்கம் கொண்டவை அல்ல' என்று உச்ச நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## "மேகேதாட்டு விவகாரத்தில் டி.கே.சிவகுமார் தேவையில்லாமல் அரசியல் செய்கிறார்" அமைச்சர் நிர்மல்குமார்

சென்னை: மே.30-

"மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு ஒருபோதும் நாங்கள் அனுமதி கொடுக்க மாட்டோம். மேகேதாட்டு விவகாரத்தில் டி.கே. சிவகுமார் பொறுப்பின்றி பேசுகிறார். தேவையில்லாமல் அரசியல் செய்கிறார்" என அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளுக்கு விரைவில் நீதி கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். போக்சோ குற்றவாளிகளுக்கு உடனடியாக தண்டனை பெற்றுத் தரப்படும். கோவை வழக்கில் துரிதமாக செயல்பட்டு, ஒவ்வொரு நாளும் அப்டேட் கொடுத்துள்ளோம்.

மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகாவின் டி.கே. சிவகுமார் பொறுப்பின்றி பேசுகிறார். தேவையில்லாமல் அரசியல் செய்கிறார். சர்ச்சை ஏற்படுத்துவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். மேகேதாட்டுவில் கர்நாடகா அணை கட்டுவதற்கு ஒருபோதும் நாங்கள் அனுமதி கொடுக்க மாட்டோம்.

இரு மாநில மக்களுக்கு இடையில் நிறைய தொழில் உறவுகள் உள்ளன. சட்டப்பூர்வமாக மட்டுமே அவர்கள் செயல்பட வேண்டும். டி.கே. சிவகுமார் தன்னிச்சையாக பொறுப்புணர்வு இல்லாமல் செயல்படுவதற்கு கடும் கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறோம்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## கோவை சிறுமி வழக்கில் போலீஸ் விசாரணை நிலவரம் என்ன? : உயர் நீதிமன்றத்தில் அரசு விவரிப்பு

சென்னை: மே.30-

கோவை சூலூரில் 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் விரைந்து நீதி கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு உறுதி அளித்துள்ளது.

கோவை மாவட்டம் சூலூரில் 10 வயது சிறுமி கடத்தப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய கார்த்திக், மோகன்ராஜ் ஆகியோரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். அவர்களுக்கு எதிராக போக்சோ சட்டம் மற்றும் பி.என்.எஸ். சட்டத்தின் கடத்தல், கொலை ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சுதந்திரமான, வெளிப்படையான விசாரணைக்கு காவல் துறை மூத்த அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வு குழு அமைக்க வேண்டும்; இந்தச் சம்பவம் தொடர்பாக சமூக வலைதளங்கில் பரவிவரும் வீடியோக்கள் புலன் விசாரணைக்கு பாதிப்பு ஏற்படுவதால், இந்த



வழக்கு தொடர்பாக செய்திகள் வெளியிட அனைத்து வகையான ஊடகங்களுக்கும் தடை விதிக்க வேண்டும் என கோரி விஷ்வ ஹிந்து பரிஷத் வட தமிழ்நாடு தலைவர் பி.சொக்கலிங்கம் பொது நல மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில், இந்த வழக்கு தொடர்பாக சமூக வலைதளங்கக்களில் பல கருத்துகள் பரப்பப்படுகின்றன. அதனால் வழக்கை சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்கக் கோருவதாக தெரிவிக்கப்பட்டது.

அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் ஆஜராகி, "இந்த வழக்கில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது; மரபணு சோதனை முடிவுகளை எதிர்நோக்கி இருக்கிறோம். இந்த வழக்கை நடத்துவதற்காக காவல் துறை தரப்பில் அரசு சிறப்பு வழக்கறிஞராக சங்கரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வழக்கில் விரைந்து விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து விரைந்து நீதி கிடைக்க செய்யும்படி அவருக்கு அறிவுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு எதிராக சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது" என தெரிவித்தார்.

மேலும், சமூக வலைதளங்களில் பரவும் வீடியோக்களை நீக்க அமெரிக்காவை சேர்ந்த இன்ஸ்டாகிராம் நிறுவனத்தை கேட்டுள்ளதாகவும், வீடியோக்களை நீக்க குறைந்தபட்சம் 7 நாட்கள் ஆகும் எனவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுப்பது தொடர்பாக விரிவான வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கப்பட உள்ளதாகவும் அவர் விளக்கம் அளித்தார்.

அரசு குற்றவியல் மூத்த வழக்கறிஞர் ஜான் சத்யன், "இந்த வழக்கின் விசாரணையை கூடுதல் எஸ்.பி. கண்காணித்து வருகிறார். குற்றம்சாட்டப்பட்ட இருவரும் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்" என குறிப்பிட்டார்.

பின்னர் நீதிபதிகள், "விசாரணையை எப்படி நடத்த வேண்டும் என காவல் துறைக்கு எப்படி உத்தரவிட முடியாது. விசாரணை சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்த மனு தொடர்பாக விரிவான உத்தரவு பிறப்பிக்கப்படும்" என கூறி, உத்தரவுக்காக வழக்கைத் தள்ளிவைத்தனர்.

## நெல்லை கவின் கொலை வழக்கு: சுர்ஜித் தாயார் கைது : 9 மாதங்களுக்குப் பிறகு சிபிசிஐடி நடவடிக்கை!

திருநெல்வேலி: மே.30-

நெல்லையை உலுக்கிய கவின் கொலை வழக்கில் 9 மாதங்களுக்குப் பிறகு சுர்ஜித்தின் தாயாரும், சப்இன்ஸ்பெக்டருமான கிருஷ்ணகுமாரியை சிபிசிஐடி போலீஸார் கைது செய்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கவின் செல்வகணேஷ் (24) மென்பொருள் பொறியாளராக வேலை பார்த்துவந்த நிலையில் காதல் விவகாரத்தில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 27ம் தேதி படுகொலை செய்யப்பட்டார். அவர் காதலித்த பெண்ணின் வீட்டார் தரப்பில் பட்டப்பகலில் இந்தக் கொலை நடந்தது அப்போது பெரும் பரபரப்பாக பேசப்பட்டது.

குறிப்பாக கொலையான கவின் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். எனவே சாதிய நோக்கத்தோடு இந்தக் கொலை நடைபெற்றதாகவும் கூறப்பட்டது. முதலில் பாளையங்கோட்டை போலீஸார் கொலையை விசாரித்த நிலையில் வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது.

இதனையடுத்து போலீஸார் பெண்ணின் சகோதரர் சுர்ஜித்தை முதலில் கைது செய்தனர்.

பெண்ணின் தந்தை சரவணன் மற்றும் தாய் கிருஷ்ணகுமாரி இருவரும் காவல்துறை உதவி ஆய்வாளர்கள். இந்த நிலையில், விசாரணையில் பெற்றோர்களும் இந்த கொலையில் உடந்தையாக இருந்தது தெரியவந்தது. எனவே முதல்கட்டமாக தந்தை சரவணனை போலீஸார் அதிரடியாக கைது செய்தனர். மேலும் உறவினர் ஜெயபால் என்பவரும் கைது செய்யப்பட்டார்.

இந்த கொலை வழக்கில் சுர்ஜித், அவரது தந்தை சரவணன், உறவினர் ஜெயபால் ஆகிய மூவரும் நீதிமன்றக் காவலில் உள்ள நிலையில் வழக்கில் புதிய திருப்பமாக தற்போது சுர்ஜித்தின் தாயாரும், சப்இன்ஸ்பெக்டருமான கிருஷ்ணகுமாரியை சிபிசிஐடி போலீஸார் இன்று கைது செய்துள்ளனர்.

இந்த வழக்கில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வந்த சிபிசிஐடி அதிகாரிகள், சம்பவத்துடன் தொடர்புடைய ஆதாரங்களின் அடிப்படையில் கிருஷ்ணகுமாரியை கைது செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.


கைது செய்யப்பட்ட அவரை போலீஸார் நெல்லை 2 வது கூடுதல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இந்தச் சம்பவம் நெல்லை பகுதியில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ரிலையன்ஸ் ரூ.95,754 கோடி லாபம் ஈட்டினாலும் தொடர்ந்து 6வது ஆண்டாக ஊதியம் பெறாத அம்பானி

புதுடெல்லி: மே.30-

மேற்கு ஆசிய போர் காரணமாக, மார்ச் காலாண்டு சற்று மந்தமாக இருந்தது. ஆனாலும், 2025 26 நிதியாண்டில் ரிலையன்ஸ் குழுமம் ரூ.95,754 கோடி லாபத்தையும், ரூ.11.76 லட்சம் கோடி வருவாயையும் ஈட்டியுள்ளது.

ஆனாலும் ரிலையன்ஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானி, தொடர்ந்து 6வது ஆண்டாக எவ்வித சம்பளமும் பெறவில்லை. கரோனா பெருந்தொற்று ஏற்பட்டதால், 2020 21 நிதியாண்டில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானி தனது ஊதியத்தைத் தானாகவே முன்வந்து துறந்தார்.




2021 22, 2022 23, 2023 24, 2024 25 ஆகிய நிதி ஆண்டுகளைத் தொடர்ந்து, கடந்த 2025 26 நிதியாண்டிலும் அவர் இதே முடிவை எடுத்துள்ளார். தன் வசமுள்ள பங்குகளுக்கான ஈவுத் தொகை (டிவிடெண்ட்) மட்டுமே அவரது முக்கிய வருவாயாக உள்ளது. சுமார் ரூ.9.6 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் உலகின் 21 வது கோடீஸ்வரராக உள்ளார்.

கரோனா தொற்றுக்கு முன்பே கூட, முகேஷ் 2008 09 நிதியாண்டு முதல் தொடர்ந்து 12 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது ஊதியத்தை ரூ.15 கோடி என்ற அளவில் தானாகவே முன்வந்து வரம்புக்குள் வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேண்டுமா சி.எம் சார்?" விஜய் மீது உதயநிதி சாடல்

சென்னை: மே.30-

"சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேண்டுமா? நீங்கள் டைம் எடுத்து கற்றுக் கொண்டு வந்து சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் வரை தமிழ்நாடு தாங்காது சி.எம் சார்" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "கடலூரில் 25 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளது மிகுந்த அதிர்ச்சியை எற்படுத்துகிறது. இப்படி தொடர்ச்சியாக நடக்கும் குற்றச் சம்பவங்களை பார்க்கும்போது, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு இருக்கிறதா, இல்லையா என மக்களுக்கு சந்தேகம் வருகிறது.

இந்த சோஃபா மாடல் (Sofa Model) அரசு அமைந்தது முதல், கொலை கொள்ளை பாலியல் வன்கொடுமை என இப்படி குற்றங்கள் நடக்காத நாளே இல்லை. தேர்தல் பிரச்சாரத்தில் பக்கம் பக்கமாக பேப்பர் வைத்து, சட்டம் ஒழுங்கு பற்றி வாய்கிழிய பஞ்ச் டயலாக் பேசியவர், முதல்வர் ஆனதும் 'டீப் ஸ்லீப் மோடு'க்கு சென்றுவிட்டார்.

பெண்கள் பாதுகாப்புக்காக நீங்கள் அறிவித்த சிங்கப் பெண்கள் படையின் தொடக்க விழாவை, கடைசி நேரத்தில் ரத்து செய்திருக்கிறீர்கள். நிகழ்ச்சியை தள்ளி வைத்துள்ளீர்களா அல்லது அந்த முயற்சியையே தள்ளி வைத்துவிட்டீர்களா என மக்கள் கேட்கிறார்கள்.

சிங்கப்பெண் படை என பெயரையும், சீருடையையும் மாற்றுவதுதான் மாற்றமா? இல்லை. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் அவகாசம் வேண்டுமா? நீங்கள் டைம் எடுத்து கற்றுக் கொண்டு வந்து சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் வரை தமிழ்நாடு தாங்காது சி.எம் சார்" என்று உதயநிதி கூறியுள்ளார்.

# உதகை படகு இல்லத்தில் நடைபெற்ற படகு போட்டி : மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்தார்

உதகை, மே.30-

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுலாத்துறை சார்பில், உதகை படகு இல்லத்தில் கோடை விழாவை முன்னிட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் நடைபெற்ற படகு போட்டியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து தொடங்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை விழாவை முன்னிட்டு மலர்காட்சி, ரோஜாகாட்சி, பழக்காட்சி மற்றும் மலைப்பயிர்கள் காட்சி உள்ளிட்ட பல்வேறு காட்சிளும், சுற்றுலாத்துறை சார்பில் 23.05.2026 முதல் 29.05.2026 வரை ஒவ்வொரு நாட்களும் கலை நிகழ்ச்சிகளான பரதநாட்டியம், கோத்தர், இருளர், படுகர் பாரம்பரிய நடனம், கரகாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக






நடைபெற்று வருகின்றன. மேலும், கோடை விழாவின் ஒரு பகுதியான படகு போட்டி நடத்தப்பட்டு, இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், கலை நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மணிப்புரி கலைக்குழுவினருக்கு நினைவு பரிசுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தார். மாவட்ட இந்நிகழ்வில், உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், சுற்றுலா அலுவலர் .சங்கர், உதவி சுற்றுலா அலுவலர் அஸ்வினி, படகு இல்ல மேலாளர் உதயகுமார், உதகை வட்டாட்சியர் சதீஷ்வரநாயக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ நீலகிரி மாவட்டம் உதகையில் ராணுவ கூட்டு குழு கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்துக்கு வருகை புரிந்த ராணுவ கூட்டுக்குழு தலைவர் ராம் மோகன் சிங் உதகை சட்டமன்ற உறுப்பினர் போஜராஜன் நீலகிரி தேயிலை தூளை இராணுவத்திற்கு வாங்க வேண்டும் என்று கோரிக்கை அளிக்கப்பட்டது இவர்களுடன் முன்னாள் கர்நாடக முதலமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டர் மற்றும் குழு உறுப்பினர் தொல் திருமாவளவன் முன்னாள் தேயிலை வாரிய துணை தலைவர் ராஜேஷ் சந்தர் பாஜக நீலகிரி மாவட்டத் தலைவர் கி தருமன் முன்னாள் மாவட்ட தலைவர் மோகன்ராஜ் உள்ளிட்டோர் இருந்தனர்






■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், திருப்பத்தூர் மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட / பொறுப்பு அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் மக்கள் தொகை இணை இயக்குநர், வாசுதேவன், மக்கள் தொகை உதவி இயக்குநர் திரிஷ்யா, மக்கள் தொகை புள்ளியியல் ஆய்வாளர் தீபா குமாரி, தேர்தல் வட்டாட்சியர் திருமலை மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்



# ஆற்காட்டில் அண்ணாமலையார் ஆலயத்தில் பிரதோஷ பூஜை!

ராணிப்பேட்டை, மே.30-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தென் பாலாற்றங்கரையோரம் எழுந்தருளி அருள்பாளித்து வரும் அருள்மிகு உண்ணாமுலை உடனுறை அண்ணாமலையார் ஆலயத்தில் பிரதோஷ பூஜை சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக பால், தயிர், சந்தனம், விபூதி, இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு நந்தியம்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகமும், அதனைத் தொடர்ந்து சிறப்பு ஆராதனையும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி ஆற்காடு எஸ் டி எஸ் மஹால் உரிமையாளர் சேகர் குடும்பத்தார் சார்பாக நடைபெற்றது. வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பிரதோஷ நாயகர் கோயில் பிரகாரத்தை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஊஞ்சல் தாலாட்டு நிகழ்ச்சியில் பக்தர்கள் சிவனடியார்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிவபெருமானை தரிசித்து சென்றனர். இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.இதில் பக்தர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தனியார் பள்ளியின் முதல்வருக்கு கொலை மிரட்டல் விடுத்து தொடர்ந்து ஆபாச வார்த்தைகள் கூறி கோசமிட்ட நபர்கள்

பெரியகுளம், மே.30-

தேனி மெயின்ரோடு, டிகல்லுப்பட்டி,செவன்த் டே அட்வென்டிஸ்ட் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, முதல்வராக அருளானந்தம் கோவில் பணியாற்றி வருகிறேன். எங்கள் திருச்சபை மற்றும் பள்ளிக் கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு முழுவதும் நிர்வாக நடைமுறையில் அடிப்படையில் கல்வி முழுவதும் நிர்வாக நடைமுறையின் நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களை சுமார் 60 நபர்களை பணி இடமாற்றம் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.இந்நிலையில் எங்களது கல்வி நிறுவனத்தில் பணிபுரியும் சவேரியார் மனைவி சுகந்தி இயற்பியல் ஆசிரியையாக கடந்த 10 ஆண்டுகளாக




பணியாற்றி வந்தார்.சுகந்தி கணவர் ஈ.புதுக்கோட்டை செவன்த் டே அட்வென்டிஸ்ட் சபை போதகராக சுமார் பத்தாண்டுகள் பணிபுரிகிறார்.கல்வி நிறுவனத்தின் நிர்வாக நடைமுறையினால் சுகந்தி கணவர் சவேரியார் வேலூர் மாவட்டத்திற்கு பணி இடமாற்றம் செய்யப்பட்டார்.இந்நிலையில் பணி இடமாற்றத்தை அறிந்த, சுகந்தி சவேரியார் கல்வி நிறுவனத்தின் மீது கோபம் கொண்டு கடந்த 25 தேதி கல்வி நிறுவனத்தில் மாணவர் சேர்க்கை நடைபெற்று கொண்டிருந்த நேரத்தில், சுகந்தியின் கணவர் சவேரியார் புரட்சிபாரம் கட்சி என்ற பெயரில் அத்துமீறி போஸ்டர் ஒட்டியும், சுமார் 20 முதல் 25 அடியாட்களுடன் கல்வி நிறுவனத்தில் முற்றுகையிட்டு அத்துமீறி கண்டன ஆர்பாட்டம் என்ற பெயரில் கல்வி நிறுவனத்தை தீ வைத்து கொழுத்தி விடுவோம் என்றும் பள்ளியின் முதல்வருக்கு கொலை மிரட்டல் விடுத்து தொடர்ந்து ஆபாச வார்த்தைகள் கூறி கோசமிட்ட நபர்கள் அடியாட்களுடன் வந்து தொடர்ந்து வன்முறை குற்ற செயலில் ஈடுபட்டு கல்வி நிறுவனத்தை சேதப்படுத்துகின்றனர். மேலும் அவர்கள் PCR வழக்கு பதிவு செய்து யாரையும் சும்மா விடமாட்டோம் நீங்கள் எங்குசென்றாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று மிரட்டுகின்றனர். இது சம்மந்தமாக, குற்ற செயலில் ஈடுபட்ட நபர்கள் மீது கடந்த 25 தேதி தென்கரை காவல்நிலயத்தில் புகார்மனு கொடுக்கப்பட்டது.ஆனால் அவர்கள் மீது தற்போது வரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. எனவே பணி இடமாற்றத்தை காரணம் கூறி தொடர்ந்து வன்முறைசெயலில் ஈடுபட்டு கல்வி நிறுவனத்தை தீ வைத்து கொழுத்தி விடுவோம் என்றும், ஆபாச வார்த்தைகள் கூறி கொலை மிரட்டல் விடுக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுத்தும், மேலும் கல்வியில் பயிலும் குழந்தைகளுக்கும், மாணவர்களுக்கும், நிறுவனத்தில் பணிபுரியும் ஆசிரிகயர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# மனிதநேயத்துடன் நடந்து கொண்ட பழனி நகர காவல் துறை

திண்டுக்கல், மே.30-

திண்டுக்கல் மாவட்டம் பழனி நகர காவல் நிலையத்திற்கு, மாற்றுத்திறனாளி ஒருவர் தனது செல்போன் காணாமல் போனதாகப் புகார் அளிப்பதற்காக வந்துள்ளார். உடல்குறைபாடு மற்றும் நடைமுறைச் சிரமங்கள் காரணமாக அவர் காவல் நிலையத்தின் உள்ளே செல்ல முடியாமல் வெளியில் தயங்கி நின்றுள்ளார்.இதனைப் பார்த்த பழனி நகர காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் ஆகியோர், உடனடியாகத் தங்களது அறையை விட்டு வெளியே வந்தனர். காவல் நிலைய வளாகத்திலேயே அந்த மாற்றுத்திறனாளி நபர் இருந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று, அவரிடம் கனிவோடு பேசி புகாரைப் பெற்றுக் கொண்டனர்மனுவை வாங்கிய அதிகாரிகள், "உங்களுக்கு வேறு ஏதேனும் உதவி வேண்டுமா?" என்று அவரிடம் அன்போடு விசாரித்துள்ளனர். இதனால் நெகிழ்ந்துபோன அந்த நபர், "ஐயா, என்னை உள்ளே அழைக்காமல், நீங்களே நேரில் வெளியே வந்து என்னிடம் மனுவை வாங்கிக் கொண்டதே எனக்கு மிகப்பெரிய சந்தோஷத்தையும் நம்பிக்கையையும் தருகிறது" எனக் கண்கலங்கக் கூறினார்இதனைத் தொடர்ந்து, அந்த மாற்றுத்திறனாளியின் செல்போன் காணாமல் போனது குறித்து உடனடியாக சைபர் க்ரைம் பிரிவினர் மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் மூலம் விசாரணை நடத்தி, மிக விரைவில் அதனை மீட்டுத்தர வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு காவல் ஆய்வாளர் அங்கேயே வைத்து உடனடியாக உத்தரவிட்டார்.காவல்துறை என்பது 'மக்களின் நண்பன்' என்பதை நிரூபிக்கும் வகையில், எளிய மக்களிடம் பழனி நகர காவல் துறையினர் காட்டிய இந்த மனிதநேயப் பண்பு தற்பொழுது சமூக வலைத்தளங்களிலும், பொதுமக்களிடையேயும் பாராட்டுகளைக் குவித்து வருகிறது.



■ நீலகிரி மாவட்டத்திற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன்வருகை தந்தார்.விடுதலை சிறுத்தைகள் கட்சி வெலிங்டன் நகர செயலாளர் அருள் உதகையில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வட்டம் மாடப்பள்ளி உள்வட்டம், கூடப்பட்டு மதுரா கரும்பூர் கிராமத்தைச் சேர்ந்த சிவகுமார் (லேட்) த/பெ தேவராஜ் என்பவர் ஓமன் நாட்டில் பணிபுரிந்து உயிரிழந்த நிலையில், இந்திய தூதரகம் மஸ்கட் மூலம் வரப்பெற்ற ரூ.34,74,618/ (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து அறுநூற்று பதினெட்டு மட்டும்) இழப்பீட்டுத் தொகைகான காசோலையை அவரது மனைவி சுமதி அவர்களிடம் மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி, (27.05.2026) அன்று வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், அலுவலக மேலாளர் (பொது) செண்பகவல்லி மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# தேனி மாவட்டம் தேவதானப்பட்டியில் ஜும்மா மசூதி திறப்பு விழா நிகழ்ச்சி

தேவதானப்பட்டி, மே.30-

தேனி மாவட்டம் பெரியகுளம் தேவதானப்பட்டியில் ஜும்மா மசூதி திறப்பு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது தலைவர் தேவதானப்பட்டி ஜமாத் தலைவர் நிஜாமுதீன் தலைமை தாங்கினார் ஜாமியா மஸ்ஜித் இறையியல் கல்லூரி முன்னாள் தலைவர் அபுதாஹிர் பேசுகையில் ஒற்றுமையை வலியுறுத்தி என்ற மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம் என்பது மனிதனுக்கு என்னென்ன ஐயப்பாடுகள் தோன்றுகின்றனவோ அவற்றையெல்லாம் நீக்கக்கூடிய நல்ல கொள்கைகளைக் கொண்ட மார்க்கம் என்றும் மனிதனை முழு மனிதனாக ஆக்குகின்ற மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம் என்றும் மனித நேயத்தை போதிக்கின்ற மார்க்கம்





இஸ்லாமிய மார்க்கம் எனவும் பேசினார் மேலும் நபிகள் நாயகத்தின் போதனைகளில் முக்கியமான ஒன்றாக கருதப்படுவது ஆண்டவனுக்கு இணையயாருமில்லை என்றார் மனிதநேயம் என்றால் மனிதர் அனைவரையும் ஒரே இனம் என்பதுதான் என்று பேசிய அவர் மனிதநேயத்தை பற்றி எல்லோரும் பேசினாலும் அதை கடைபிடிக்கிறதா என்றால் சில நேரங்களில் சிலர் இல்லை என்று இன்றைக்கு இல்லை என்றார் பறவைகளிடம் கூட நல்ல பண்புகள் காணப்படுகின்றன ஒரு பறவைக்கு கூட இன்னொரு பறவைக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் உண்டு என்பதை நாம் நன்றாக அறிவோம் அந்த வகையில் ஒருவருக்கு ஒருவர் அன்பு பாராட்டுகின்ற மனிதநேயத்துடன் நடந்து கொண்டு ஒரு நல்ல பண்புகளை வளர்க்கக்கூடிய மார்க்கம் என்ற மார்க்கம் யாருடையமனதும் நோகக்கூடாது யாரையும் குறைத்து பேசக்கூடாது என்கிற பண்பாட்டினை தான் இஸ்லாமுக்கு இஸ்லாம் நமக்கு போதிக்கின்றது விசுவாசம் இல்லை செய்நன்றி மறத்தல் சினம் கொள்ளுதல் பிறர் மனம் புண்படும்படி பேசுதல் போன்ற குணங்களை உடையவர்கள் மனிதநேயமற்றவர்கள் ஆவர் என்றும் இப்படிப்பட்டவர்கள் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் நபிகள் பெருமானார் நமக்கு போதித்துள்ள நற்பண்புகள் காலத்தால் அழிக்க முடியாது என்று பேசினார் ஒற்றுமையுடன் இருப்பது நல்ல காரியங்களை செய்வது தர்மம் செய்வது சலாம் சொல்ல முந்திக் கொள்வது நோயாளிகளை சென்று காண்பது கோபத்தை அடக்குவது அன்புடன் நடந்து கொள்வது என பல நற்பண்புகளை அமைக்க சொல்லி இருக்கிறார் என்பதை சுட்டிக்காட்டி மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் நபிகள் பெருமகனார் என்றார். இவ்விழாவில் நாட்டாமை சிக்கந்தர், தமிழ் மாநில காங்கிரஸ் தேவானப்பட்டி நகரத் தலைவர் தலைவர் பி எம் கமர்தின், அனைத்து மத தலைவர்களும், ஜமாத்தார்களும். ஒற்றுமையுடன் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.



# ஆற்காட்டில் ஸ்ரீ கெங்கையம்மன் ஜாத்திரை விழா

ராணிப்பேட்டை, மே.30-

ராணிப்பேட்டை மாவட்டம் சீதாராமன் தெருவில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் 62 ஆம் ஆண்டு ஜாத்திரை திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. முன்னதாக காப்பு கட்டுதளுடன் துவங்கிய விழாவில் பால்குட ஊர்வலம், அக்னி கரக ஊர்வலம், கூழ்வார்த்தல் ஆகியவை நடைபெற்று வந்த நிலையில் இறுதி நாளான நேற்று ஸ்ரீ கெங்கையம்மன் சிரசு ஊர்வலம் வானவேடிக்கை, மேளதாள வாத்தியங்கள் முழங்க முக்கிய வீதிகளில் திருவீதி உலா நடைபெற்றது. முன்னதாக காப்பு கட்டி விரதம் இருந்த பக்தர்கள் அந்தரத்தில் தொங்கியபடி வந்து அம்மனுக்கு மாலை அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து சிரசு ஏற்றுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. பக்தர்கள் பொங்கலிட்டு அம்மனுக்கு படைத்து தங்கள் வேண்டுதலை நிறைவேற்றினர். இதில் பக்தர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் 15 இடங்களில் ஏழை எளிய மக்களுக்கு மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் சரத்குமார் உணவு வழங்கினார்

தாம்பரம், மே.30-


செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் , பொதுமக்களுக்கும், ஏழை களுக்கும் தங்குதடையின்றி உணவு வழங்கத் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான ஜோசப் விஜய் உத்தரவிட்டிருந்தார் அதனை தொடர்ந்து தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணா நகர், தாம்பரம் முடிச்சூர் கிழக்கு



தாம்பரம்,சிட்லபாக்கம் உட்பட 15இடங்களில் சுமார் 3000 பேருக்கு உணவு வழங்கப்பட்டது உணவு வழங்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்த மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சரத்குமாரை கட்சி நிர்வாகிகள் வரவேற்றனர்இதனை தொடர்ந்து பொது மக்களுக்கு அமைச்சர் சரத்குமார் உணவு பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார் அதனைத் தொடர்ந்து கிருஷ்ணா நகர் பகுதியில் மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் வரலட்சுமி என்கின்ற ஷீபா பிரேம், மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் டிகுணசேகரன், மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய பகுதி கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ கிருஷ்ணகிரி பழையபேட்டையில் உள்ள லட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலில் 40வது ஆண்டு பிரம்மோற்சவ விழாவையொட்டி, லட்சுமி நரசிம்மருக்கு திருக்கல்யாண வைபவம் விமரிசையாக நடைபெற்றது.இதையொட்டி சுதர்சன ஹோமம், தன்வந்திரி ஹோமம் மற்றும் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன.பின்னர் மாங்கல்ய பூஜையுடன் திருக்கல்யாணம், மாலை மாற்றுதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடந்தன.இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



■ சென்னை,ஆவடி நந்தவன மேட்டூர் கன்னியம்மன் கோவில் தெருவில், அமைந்துள்ள ஸ்ரீ தேவி கன்னியம்மன் ஆலய, புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண நூதன ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழும் பராபவ வருஷம் வைகாசி மாதம் திரியோதசி நிதி சுவாதி நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் யாகசாலையில் மூன்று நாட்களாக சிவாச்சாரியார்களால் பூஜிக்கப்பட்ட புனித கலச நீரை வானவேடிக்கை, மங்கள வாத்தியம், மேளங்கள் முழங்க கோயில் கோபுர கோபுர கலசத்தின் உச்சியின் மீது ஊற்றி பொதுமக்கள் மேல் தெளித்தனர். சாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது, ஆலய நிர்வாகி முரளி ஆதிகேசவன் மற்றும் நிர்வாகிகள் விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.



# மூலவருக்கு 108 இளநீர் சிறப்பு அபிஷேகம்

## பொத்தூர் கிராமம் ஸ்ரீ அன்னபூரணி சமேத ஸ்ரீ ஓதனவனேஸ்வரர் ஆலயத்தில் அக்னி நட்சத்திர நிறைவு விழா

மாதவரம், மே.30-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பொத்தூர் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி சமேத ஸ்ரீ ஓதனவனேஸ்வரர் ஆலயத்தில் அக்னி நட்சத்திர நிவர்த்தியை முன்னிட்டு மூலவருக்கு 108 இளநீர் சிறப்பு அபிஷேகம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட தலைவர் பி.எஸ்.சபாபதி லோகேஷ்வரிசபாபதி ஆகியோர் ஏற்பாடு மற்றும் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அருள்மிகு ஸ்ரீ ஓதனவனேஸ்வரர் சமேத ஸ்ரீ அன்னபூரணி மற்றும் ஸ்ரீ காலபைரவர் சுவாமிகளுக்கு 108 இளநீர் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு வில்லிவாக்கம் ஒன்றிய பாமக செயலாளர் சகாதேவன், ஆன்மீக சிந்தனையாளர்கள் சிதம்பரம், சங்கரலிங்கம், ஆலய பூசாரிகள் சுரோஷ், அருண், வாசையா மற்றும் கோபால், வெங்கடேசன், ரோஜாம்மாள், மேகநாதன் உள்ளிட்ட ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.




■ மே 28 உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் தாராபுரம் தெற்கு நகரம் சார்பாக திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் யுவராஜ், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக இணைச் செயலாளர் ஷேக் பரீத் ஆகியோர் ஆலோசனைப்படி நகர கழக செயலாளர் அபுத்தாஹீர் தலைமையில் சுமார் 150 க்கும் மேற்பட்டோருக்கு காலை உணவு வழங்கப்பட்டது இந்நிகழ்வில் கௌரி சித்ரா, மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் நவமணி, நகர கழக இணைச் செயலாளர் அசோக் முன்னிலை வகித்தனர், போக்குவரத்து சங்க நிர்வாகிகள், தெற்கு நகர நிர்வாகிகள், சையத்பகாவுதின், முகம்மது தஸ்லிம், சுல்தான், 18 வது வார்டு செயலாளர் துரைசாமி மற்றும் மிரான் , 22 வார்டு செயலாளர் ஈஸ்வரன், 23 வார்டு செயலாளர் ஜாகிர் உசேன் மற்றும் ஜெயக்குமார், திருப்பூர் மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் லோகேஷ் மற்றும் தாராபுரம் நகர இளைஞரணி அமைப்பாளர் விமல் மற்றும் வடக்கு நகர நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்




■ உலக பட்டினி தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ரவுண்டானா அருகில் தமிழக வெற்றி கழகத்தின் ஊத்தங்கரை ஒன்றிய மற்றும் நகர கழகம் சார்பில் உணவு வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் இளையராஜா தலைமையேற்று பொதுமக்களுக்கு உணவு மற்றும் இனிப்புகள் வழங்கினார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி,மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அமைப்பு பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். பொதுமக்கள் இந்த நிகழ்ச்சியை வரவேற்று பாராட்டினர்.

# பள்ளிவாசல்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க ரூ.50 ஆயிரம் மானியம்

## ஜூன் 30க்குள் விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரை

கிருஷ்ணகிரி, மே.30-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், வரும் 30.06.2026க்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 18 வயது முதல் 60 வயது வரை உள்ள உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க ரூ.50,000 மானியத் தொகை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பள்ளிவாசல்களில்



பணியாற்றும் பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்கள் பயனடையலாம். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் அல்லது சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தை பெற வேண்டும். தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பித்து அதிகாரிகளின் ஒப்புதல் பெற்ற பின்னரே பயனாளிகள் இருசக்கர வாகனம் வாங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் 30.06.2026ம் தேதிக்குள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

# கோமாட்சு நிறுவனத்தால் ஆகாய தாமரை அகற்றும் இயந்திரம் (மதிப்பு ரூ. 50 இலட்சம்) வழங்கப்பட்டதுபீர்கங்கரணை ஏரி, பெருங்களத்தூர் ஆகாய தாமரை அகற்றும் திட்டம் ஒப்படைப்பு விழா

பெருங்களத்தூர், மே.30-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பெருங்களத்தூர் பீர்க்கங்காரணை பகுதியில் கோமாட்சு நிறுவனம் தமது சமூக பொறுப்பு நிதியளிப்பு (CSR) திட்டமாக, எக்ஸ்நோரா இன்டர்நேஷனல் பவுண்டேஷன், தாம்பரம் மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு நீர்வளத்துறையுடன் இணைந்து பீர்கங்கரணை ஏரிலுள்ள ஆகாய தாமரை அகற்றும் பணியை நடத்தியது. அந்த வேலை அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது. அரசு அதிகாரிகள், கோமாட்சு நிறுவன பிரதிநிதிகள், சுற்றுச்சூழல் அமைப்பினர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

இந்த திட்டம் ஏரிக்கு உட்பட்ட இயற்கை சூழலை மீட்டெடுக்க, நீர் பரப்பையும் சேமிப்பையும் அதிகரிக்க, ஆகாய




தாமரை அதிகவளர்ச்சியை தடுக்கவும், பகுதியின் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக நடந்தது. இதை தாம்பரம் மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு நீர்வளத் துறையுடன் சேர்ந்து செய்தனர்.கோமாட்சு இந்தியா, சிஷிஸி முயற்சியின் பகுதியாக, ஆகாய தாமரை அகற்றும் செயல்பாட்டிற்கு பயன்படும் தனி இயந்திரத்தையும் மதிப்பு ரூ. 50,00,000 கடன் அளவில் தானமாக வழங்கியது. அந்த இயந்திரம் அகாய தாமரை நீக்குவதையும், நீர் சுத்தப்படுத்தல் பணிகளையும் மிக எளிதாகவும் வேகமாகவும் செய்ய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் டி.சரத்குமார் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு அரசு, நிறுவனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் சேர்ந்து பணியாற்றியதைப் பாராட்டினார்.கோமாட்சு இந்தியாவின் மனிதவளப் பிரிவு தலைவரும் பாதுகாப்பு, சட்டப் பின்பற்றல் அதிகாரியும் சி.சுந்தரராஜன் இந்த நிகழ்ச்சியின் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டனர் விழாவில் பேசிய சிறப்பு விருந்தினர்கள் ஏரிகள் மற்றும் நீர்வளங்களை மாசு மற்றும் ஆகாய தாமரை போன்ற தீமை பயக்கும் வளர்ச்சியிலிருந்து பாதுகாப்பது அவசியம் என்பதையும், நீர் தரம், உயிரின பல்வகைத் தன்மை மற்றும் நிலத்தடி நீர் சாகுபடிக்கு இது மிக முக்கியம் எனவும் கூறினார். சுற்றுச்சூழலை மிண்டு பாதுகாக்க தொழிற்சாலை, அரசுகள், உள்ளூர் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் ஒன்றாக செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.எக்ஸ்நோரா இன்டர்நேஷனல் பவுண்டேஷன் தலைவர் எ ஸ்.செ ந்தூர் பாரி மாவட்ட நிர்வாகம், கோமாட்சு அதிகாரிகள், தாம்பரம் மாநகராட்சி, தமிழ்நாடு நீர்வளத்துறை மற்றும் கூடியுள்ள அனைவருக்கும் நன்றி கூறினார்.இந்த ஆகாய தாமரை அகற்றும் திட்டம் ஏரியின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும், நிலத்தடி நீரை அதிகரிக்க உதவும், நீர் சேமிப்பு திறனை உயர்த்தும் மற்றும் நீண்டகால சுற்றுச்சூழல் மறுசீரமைப்புக்கு துணையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாலை தந்தி

சனிக்கிழமை 30.05.2026



# காளையார்கோவிலில் தவெக சார்பில் உணவு பரிமாறப்பட்டது

## காளீஸ்வரன் தலைமையில்ஒசெகளானராஜா சுவரில் கவாஸ்கர் பங்கேற்பு

காளையார் கோவில், மே.30-

தமிழ்நாடு முதலமைச்சரும் தமிழக வெற்றிக் கழகத் தலைவருமான ஜோஸப் விஜய் ஆணையின்படி உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழகமெங்கும் ஏழை எளிய மக்களுக்கு உணவு வழங்கப் பட்டது...அந்த வகையில் . சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக செயலாளர் முத்துபாரதி அறிவுறுத்தலின் பேரில் காளையார்கோவிலில் தமிழக வெற்றி கழகம் சார்பில் பேருந்து நிலையம் அருகில் ஏழை எளிய பொதுமக்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் பாட்டில்கள் வஜங்கப்பட்டது..சிவகங்கை தெற்கு மாவட்ட கழக இணை செயலாளர் ஆர். காளீஸ்வரன் தலைமையிலும் காளையார்கோவில் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஏ.ராஜா காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எம் .சுணில் கவாஸ்கர் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது...இந்த நிகழ்ச்சியின் போது காளையார்கோவில் மேற்கு ஒன்றிய கழக இணை செயலாளர் கே.ராஜேஷ் கண்ணன் காளையார்கோவில் மேற்கு ஒன்றிய கழக பொருளாளர் ஆர். சக்திவேல் காளையார்கோவில் மேற்கு ஒன்றிய துணை செயலாளர் கே..ரமேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...உணவுப் பொருட்களை பெற்றுச் சென்ற பொதுமக்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினையும் மக்கள் பணிகள் சிறக்க தங்களது வாழ்த்துகளையும் தெரிவித்து பாராட்டிச் சென்றனர்...

# திருத்தணியில் தொடரும் மோட்டார் சைக்கிள் திருட்டு

திருத்தணி, மே.30-

திருத்தணி தாலுகா அருங்குளம் கிராமத்தை சேர்ந்தவர் வினோத் குமார் (33). இவர் தனது மோட்டார் சைக்கிளை நேற்று முன்தினம் இரவு வீட்டின் வாசலில் நிறுத்திவிட்டு தூங்கச் சென்றார். மறுநாள் காலை எழுந்து வந்து பார்த்தபோது, மோட்டார் சைக்கிளை மர்ம நபர்கள் திருடிச் சென்றது தெரியவந்தது.

இதுகுறித்த புகாரின் பேரில் கனகம்மாசத்திரம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.





திருத்தணி வருவாய் கோட்டத்தில் 6 சட்ட ஒழுங்கு போலீஸ் நிலையங்கள், ஒரு அனைத்து மகளிர் போலீஸ் நிலையம் மற்றும் ஒரு மதுவிலக்கு அமல்பிரிவு போலீஸ் நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்த போலீஸ் நிலையங்களை கண்காணிக்க ஏ.எஸ்.பி. அலுவலகமும் இயங்கி வருகிறது. ஏ.எஸ்.பி. தலைமையில் தனிப்படை போலீசாரும் நியமிக்கப்பட்டு திருட்டு, வழிப்பறி உள்ளிட்ட குற்றச் செயல்களை தடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசார் போதிய அளவில் பணியில் இல்லாததால் திருட்டு சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

# தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு: தவெக அரசு மீது டிடிவி.தினகரன் குற்றச்சாட்டு

ராமநாதபுரம், மே.30-

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளதுடன், பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களும் அதிகரித்து ள்ளதாக அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன் தெரிவித்தார். ராமநாதபுரத்தில் அமமுக பிரமுகரின் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்து 2 வாரங்களில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றச்செயல், ரவுடியிசம் அதிகரித்து வருகிறது. மாற்றம் வேண்டும் என மக்கள் தவறான முடிவெடுத்து விட்டனர் என்பதை இன்னும் 6 மாதங்களில் மக்கள் உணர்ந்து கொள்வர். ஆசை வார்த்தை கூறி... அதிமுக எம்எல்ஏ.க்களுக்கு தவெக குதிரை பேரம் நடத்தி அமைச்சர் பதவி வழங்குவதாக ஆசைவார்த்தை கூறியதால், அதிமுகவில் இருந்து சிலர் பிரிந்து சென்று ஆதரவளித்தனர். ஆனால் தவெக பொய்யான வாக்குறுதி அளித்ததை அறிந்த பலரும் மீண்டும் பழனிசாமி தலைமையிலான அதிமுகவில் இணைந்து வருகின்றனர்.



ஜெயலலிதாவின் உண்மைத்தொண்டர்கள் அனைவரும் விரைவில் ஓர் அணியில் இணைவார்கள். தவெகவில் இணைந்த வெல்லமண்டி நடராஜன் உள்ளிட்ட உண்மையான விசுவாசிகளும் விரைவில் அதிமுகவில் இணைவார்கள். திமுக கூட்டணியில் வெற்றி பெற்றவர்கள் தவெகவுக்கு ஆதரவு அளித்து, அமைச்சரவையில் சேர்ந்துவிட்டு, குடியரசு தலைவர் ஆட்சி வராமல் தடுப்பதற்காக ஆதரவு அளித்ததாகக் கூறுவது அவர்களுக்கு சரியாக இருக்கலாம். அது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல. அவருக்கு ஆதரவு அளித்த அதிமுக எம்எல்ஏக்களை விஜய் நடுத்தெருவில் விட்டுள்ளார். குறுக்கு வழியில் திராவிட கட்சிகளை முதல்வர் விஜய் அழிக்கப் பார்க்கிறார். மின்சார பிரச்சினை உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளை அவர் சரியாக கையாளவில்லை. ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதல்வர் டெல்லியில் பிரதமரை சந்தித்த பின்பு செய்தியாளர்களை சந்தித்து பிரதமருடன் நடைபெற்ற உரையாடல் குறித்து விளக்குவது வழக்கமானது. ஆனால் விஜய் இதுவரை செய்தியாளர்களைச் சந்திக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே, தலைமையில் போதைப் பொருள் ஒழிப்பு, சாலைப்பாதுகாப்பு ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது

## 4 சக்கர வாகனங்களில் சீட்பெல்ட் அணியாதது வலியுறுத்தி சாலைகளின் முக்கிய இடங்களில் விழிப்புணர்வு

திருப்பூர், மே.30-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே,, தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் போதைப் பொருள் ஒழிப்பு, சாலைப்பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்து மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. பொதுமக்களிடையே சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, விபத்துகளை தவிர்க்கும் நோக்கில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் சாலைப்பாதுகாப்பு குறித்து மாதாந்திர ஆய்வு கூட்டம் நடைபெற்றது. குறிப்பாக, விபத்துக்கான காரணங்களாக இருச்சக்கர வாகனங்களில் ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்ந்து இருப்பவர் இருவரும் தலைகவசம் அணியாதது, வாகனம் ஓட்டும் போது அலைபேசியை பயன்படுத்துவது, மோட்டார், கார் போன்ற 4 சக்கர வாகனங்களில் சீட்பெல்ட் அணியாதது வலியுறுத்தி சாலைகளின் முக்கிய இடங்களில் விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் நெடுஞ்சாலைகள் துறையின் சார்பில் வாகன ஓட்டிகள்



எளிதில் அறியும் வண்ணம் வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அவினாசி காவல் போக்குவரத்து நிலையத்திற்குட்பட்ட, அவிநாசி முதல் ஈரோடு செல்லும் சாலையில் அமைந்துள்ள அரசு கலை கல்லூரி மற்றும் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் உள்ள சாலையின் இருபுறமும் வேகத்தடை அமைக்க வேண்டும் பெருமாநல்லூர் போக்குவரத்து காவல் நிலையத்திற்குட்பட்ட, வலசுப்பாளையம் பிரிவு அருகில் உள்ள சாலையில் தெருவிளக்கு அமைக்க வேண்டும். பெருமாநல்லூர் போக்குவரத்து காவல் நிலையத்திற்குட்பட்ட, பெருமாநல்லூர் முதல் குன்னத்தூர் செல்லும் சாலையில் தட்டான் குட்டை பகுதியில் எல்.ஜி. மருத்துவமனை அருகில் வேகத்தடை அமைக்க வேண்டும். பல்லடம் காவல் போக்குவரத்து நிலையத்திற்குட்பட்ட, கோவை முதல் திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அவிநாசிபாளையம் ரோடு சந்திப்பில் வாகன ஒட்டிகள் மற்றும் பொதுமக்களும் சாலையை கடக்கும் போது போதிய வெளிச்சம் இல்லாததால் விபத்து ஏற்படுகின்றது.எனவே அவிநாசிபாளையம் திருச்சி ரோடு சந்திப்பில் உள்ள உயர் மின் கோபுர விளக்கு அமைக்க வேண்டும். மேலும் அவிநாசிபாளையம் முதல் திருச்சி ரோடு சந்திப்பில் அகற்றப்பட்டுள்ள சாலையின் மைய தடுப்பு சுவற்றை மீண்டும் அதே இடத்தில் அமைக்க வேண்டும். செட்டிபாளையம் பிரிவு அருகே ஐஸ்வர்யா மருத்துவமனை முன்பு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மின் மாற்றியை இடமாற்றம் செய்ய வேண்டும் உள்ளிட்ட பணிகளை சமந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், சாலை வளைவுகள், சாலை சந்திப்புகள், குறுகிய சாலைகள், போக்குவரத்து நெரிசல் மிக்க இடங்கள் போன்ற பகுதிகளில் அதிகம் வேகம் காரணமாக விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, சமந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் சாலை பாதுகாப்புக் குறித்து தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் கொடுங்காயங்களின் விளைவாக மன அளவிலும், பொருளாதார நிலையிலும் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வில் அனைத்து மக்களின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும். திருப்பூர் மாவட்டத்தை சாலை விபத்தில்லா மாவட்டமாக மாற்ற வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே,, தெரிவித்தார்

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே,, தலைமையில் சட்டம் ஒழுங்கு குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாநகர துணை காவல் ஆணையர்கள் .தீபா சத்யன் பிரவீன் கௌதம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.சு.துரைமுருகன், வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள்கூட்டம்மாவட்டஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,அவர்கள் தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, மே.30-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (29.05.2026) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.மேலும், விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றி, அவர்களுக்குத் தேவையான அனைத்து தேவைகளையும் தெரிவிக்கும் பொருட்டு, தமிழக அரசால் பிரதி மாதந்தோறும்



இக்கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், கண்மாய் பகுதிகளில் வளர்ந்துள்ள சீமை கருவேல் மரங்களை அகற்றிடவும், கண்மாய்க்கு செல்லும் ஊரணிகளை வெட்டு மராமத்து செய்திடவும், கண்மாய்களை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளவும், தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும், இலவச மின் இணைப்புகள் வழங்கிடவும், கண்மாய் ஆக்கிரமிப்புக்களை அகற்றிடவும், வரத்துக்கால்வாய்களை சீரமைத்திடவும்,விவசாய பணிகளுக்கென இயந்திரங்கள் வழங்கிடவும், விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், ஆழ்துளை கிணறுகள் அமைத்திடவும், முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டம் அல்லது நபார்டு திட்டத்தின் கீழ் தார் சாலை வசதி அமைத்திடவும், அரசு மானியத்தில் சோலார் பம்ப்செட் அமைத்திடவும், தேவையான சான்றிதழ்களை வழங்கிடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திடவும், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திடவும் மற்றும் விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும் துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், கடனுதவிக்குரிய மானியத்தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு தொகை வழங்கிடவும், விவசாயிகளுக்கான தனி அடையாள எண் வழங்கிடவும், குறிப்பாக இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.மேலும், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர். பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.இராஜேந்திர பிரசாத், இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.சு.சுந்தரமகாலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மைத்துறை) (பொ) திரு.மதுரைச்சாமி உட்பட பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161